**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. STC 98 of 2023 |

Depositions of PW -3 witness for ________ { Prosecution / Defence / Court

Name :முருகன்

Father's Name : த/பெ.பாலகிருஷ்ணன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது காக்கா சாவடியில் குடியிருந்து கொண்டு வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.06.2022 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் சூலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வேலைக்கு வருவதற்காக கிளம்பினேன் காலை சுமார் 11.15 மணியளவில் கோவை திருச்சி செல்லும் மெயின் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சிந்தாமணிபுதூர் அனுமன் கோவில் அருகே வந்து கொண்டிருந்த பொழுது அதே ரோட்டில் எதிர் திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாக சாலை விதியை மதிக்காமல் எனது வண்டியில் மோதி விட்டார். அதில் நான் கீழே விழுந்ததில் எனது வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது மற்றும் வலது காலில் விரல்களில் ரத்தக்காயம் ஏற்பட்டது. விபத்தில் எதிர் திசையில் வந்தவருக்கும் அடிபட்டது. எங்கள் இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் அங்கு சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் இருந்த பொழுது அங்கு வந்த போலீசார் நான் கொடுத்த

புகாரை வாங்க மறுத்து விட்டார்கள் மேலும் நான் புகாரில் சொன்னது வேறு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது என்னால் எழுத இயலவில்லை. ஆகவே போலீசார் என்னை வலுக்கட்டாயம் செய்து அவர்கள் எழுதியதில் ரேகை பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

நான் போலீசாரிடம் மருத்துவமனை வந்த பொழுது நடந்த விபரத்தை நான் சொல்லசொல்ல போலீசார் எழுதிக் கொண்டதில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது நான் சொல்லாத விபரத்தை போலீசார் எழுதி என்னிடம் கைரேகை வாங்கிக் கொண்டதாக நான் உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எனக்கு விபத்து சம்பவம் நடக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.27 19:01:54 +0530